

## ரூ.9 ஆயிரம் கோடியில்

# 20 ஏர் பஸ் விமானங்களை பாரமவுண்ட் நிறுவனம் வாங்குகிறது

சென்னை, ஜூன்.20–

சென்னையை தலைமை அலுவலகத்தை கொண்டு இயங்கி வருகிறது பாரமவுண்ட் விமான சேவை நிறுவனம். இந்தியாவில் உள்ள முன்னணி விமான நிறுவனங்களில் ஒன்றாக திகழ்ந்து வருகிறது. விமானத்தில் பறந்தபடியே செல்போனில் பேசும் வசதியை கொண்டு வருவதற்கான பணிகளில் இந்த நிறுவனம் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. குறைந்த அளவிலான பயணிகளை ஏற்றிச் செல்லும் தனது சேவையின் மூலம் உள்நாட்டு விமான சேவையில் தனக்கென ஒரு இடத்தை இந்த நிறுவனம் உருவாக்கிக் கொண்டுள்ளது. எகானமி வகுப்பு பயணத்தில் கூட பெரிய வசதியான இருக்கைகளையும், சிறந்த உணவையும் இந்நிறுவனம் அளித்து வருகிறது.

பாரமவுண்ட் நிறுவனம், ஏர் பஸ் ஏ321 ரகத்தை சேர்ந்த 10 விமானங்களை வாங்குவதற்காக ஒப்பந்தத்தை செய்து கொண்டுள்ளது. மேலும் 10 விமானங்களை கூடுதலாக வாங்கிக் கொள்ளும் வகையிலும் இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் மூலம், முக்கிய நகரங்களில் இருந்து சர்வதேச சேவையை பாரமவுண்ட் நிறுவனம் தொடங்க முடியும்.

ரூ.9 ஆயிரம் கோடி மதிப்பில் இந்த விமானங்கள் வாங்கப்படவுள்ளன. பிரான்ஸ் தலைநகர் பாரீசில் நடைபெற்ற விமான கண்காட்சியில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த விமானங்களை வாங்குவதற்கான நிதி உதவியை, ஐரோப்பிய மத்திய வங்கி அளிக்கிறது.

இது பற்றி பாரமவுண்ட் நிறுவனத்தின் மேலாண் இயக்குனர் எம்.தியாகராஜன் பேசுகையில், "எங்கள் நிறுவனத்தின் சரித்திரத்தில் இது ஒரு மைல்கல். சர்வதேச சந்தையில் முக்கிய இடத்தை பிடிக்கும் முயற்சியாகவும், எமது நிறுவனத்தின் விரிவாக்கப் பணிகளின் ஒரு பகுதியாகவும் இச்சிறப்பு வாய்ந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. தற்போது வாங்கப்படும் விமானங்கள், எங்களது இலக்குகளை அடைய பேருதவி புரியும்'' என்றார்.